**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAHILA COURT / ADDITIONAL SPECIAL COURT FOR EXCLUSIVE TRIAL OF CASES UNDER POCSO ACT,COIMBATORE.

S.C.No. 97 of 2022

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-2 விஜயதரன் | Caste | - |
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Cell | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023.

எதிரி ஆஜர்.

இந்த சாட்சி தன்னுடைய வயதை 11 என்று சொன்னார். இளவர் என்பதால் அவருடைய அறிந்துகொள்ளும் மற்றும் புரிந்துகொள்ளும் தன்மையை அறிய கீழ்க்கண்ட நீதிமன்ற வினாக்கள் கேட்கப்பட்டது,

கேள்வி தங்கள் பெயர் என்ன? தாங்கள் எந்த பள்ளியில் படிக்கிறீர்?

பதில் விஜயதரன், சரஸ்வதி நர்சரி பள்ளியில் படிக்கிறேன்.

கேள்வி இந்த இடம் எது என்பதும் நான் யார் என்பதும் நீங்கள் எதற்காக இங்கு வந்துள்ளீர் என்பதும் தெரியுமா?

பதில் கோர்ட், ஜட்ஜ், தெரியும்.

கேள்வி தங்களுக்கு சாட்சி சொல்லிக் கொடுத்தார்களா? தங்களுக்கு நல்லது எது கெட்டது எது தெரியுமா?

பதில் எனக்கு தோன்றுவதை சொல்கிறேன். யாரும் எனக்கு சொல்லிக் கொடுக்கவில்லை.

(இந்த சாட்சி சாட்சியம் அளிக்கக் கூடிய மனநிலையில் உள்ளார் என இந்நீதிமன்றம் திருப்தியடைந்ததால் சாட்சி விசாரிக்கப்பட்டார்.)

**முதல் விசாரணை-**

ஆஜர் எதிரி என்னுடைய தகப்பனார். நான் ஆனைமலை தாலுகா, பெரிய போது,

காமராஜ் வீதியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய அம்மா பெயர் கார்த்திகேயினி. நானும், என் அண்ணன் தர்ஷனும், சின்னப்பம்பாளையத்தில் அன்னை மெட்ரிக்குலேசன் பள்ளியில் படித்தோம். அப்போது நான் 2ம் வகுப்பு படிக்கும் போது என் அம்மா இறந்து போனார். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. நானும், என் அண்ணா தர்ஷனும் ஒரு நாள் தூங்கிக் கொண்டிருந்தோம். மறுநாள் காலை போலீசார் வந்ததாக சொன்னார்கள். நான் பார்க்கவில்லை. போலீசார் எதற்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. பக்கத்து வீட்டு அத்தை, பேர் சரியாக ஞாபகமில்லை, அவங்க தான் என்னையும், என் அண்ணன் தர்ஷனையும் கூட்டிக்கொண்டு வைத்துக் கொண்டார்கள். அதற்கப்புறம் நான் என் அம்மா கார்த்திகேயினியை பார்க்கவில்லை. எங்க அப்பாவை காணவில்லை. எங்க அப்பாவை ஜெயிலுக்கு கூட்டிட்டு போறதா சொன்னாங்க. கொஞ்ச நாள் கழித்து எங்க அப்பா வந்துவிட்டார். நான் 4ம் வகுப்பு மேற்சொன்ன சின்னப்பம்பாளையம் பள்ளியில் தான் படித்தேன். தற்போது 5ம் வகுப்பு, விஜயமதி அத்தை வீட்டில் பட்டணம் என்ற இடத்திற்கு போய் சரஸ்வதி நர்சரி பள்ளியில் படித்து வருகிறேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை -**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

2023ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06ம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

"என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

அமர்வு நீதிபதி,
மகிளா கோர்ட் / கூடுதல் சிறப்பு நீதிமன்றம்
(பாலியல் வன்முறையிலிருந்து குழந்தைகளை
பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் விசாரிக்கும்
சிறப்பு நீதிமன்றம்), கோயமுத்தூர்.

06/02/2023